**செய்தி வெளியீடு எண்: 042** **நாள்: 13.01.2018**

**இன்று (13.01.2018), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் புனரமைக்கப்பட்ட மேட்டூர் அணை பூங்கா மற்றும் காவிரி நடுவர்மன்ற இறுதி ஆணையினை மத்திய அரசிதழில் வெளியிட செய்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சாதனையை போற்றிடும் நிறுவப்பட்ட நினைவுத் தூண் ஆகியவற்றை திறந்து வைத்து, ஆற்றிய உரை:**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளுக்காக இறுதி மூச்சு உள்ள வரை பாடுபட்டு, அவருடைய சக்தி முழுவதும், தமிழக விவசாயிகளின் நலன்காக்க பாடுபட்டு பெற்ற வெற்றியை இன்றைக்கு நினைவுகூரும்விதமாக இங்கே காட்சியளிக்கின்ற இந்த இனிய நிகழ்ச்சிக்கு தலைமைப் பொறுப்பேற்றிருக்கின்ற மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பழகன் அவர்களே, இங்கே சுருக்கமாகச் சொன்னாலும், தெளிவாக இந்த அணையினுடைய சிறப்பு, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கை, இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளை சுருக்கமாக எடுத்துரைத்த மேட்டூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், மதிப்புக்கும், மரியாதைக்குரிய முன்னாள் அமைச்சர் திரு.செம்மலை அவர்களே, இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பன்னீர்செல்வம் அவர்களே, நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.சுந்தரம் அவர்களே, சேலம் மேற்குத் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் திரு.வெங்கடாசலம் அவர்களே, சேலம் தெற்குத் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் திரு.சக்திவேல் அவர்களே, சங்ககிரி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.ராஜா அவர்களே, ஓமலூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.வெற்றிவேல் அவர்களே, வீரபாண்டி சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரி மனோன்மணி அவர்களே, ஏற்காடு சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய சகோதரி சித்ரா அவர்களே, கெங்கவள்ளி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.மருதமுத்து அவர்களே, ஆத்தூர்

சட்டப்பேரவை உறுப்பினர் திரு.சின்னத்தம்பி அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற திரு.குருசாமி அவர்களே, நகர்மன்றச் செயலாளர் திரு.சந்திரசேகர் அவர்களே, முன்னாள் சேர்மன் திரு.சரவணன் அவர்களே, சகோதரி பொற்செல்வி சதாசிவம் அவர்களே, திரு.அருணாச்சலம் அவர்களே மற்றும் இந்த மேடையிலே வீற்றிருக்கின்ற கழகத்தின் நிர்வாகிகளே, அரசு அலுவலர்களே, பொதுப்பணித்துறையைச் சார்ந்த உயர் அதிகாரிகளே, வருகை தந்துள்ள முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்களே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே, முன்னாள் ஊராட்சி ஒன்றிய பிரதிநிதிகளே, கூட்டுறவு சங்க நிர்வாகிகளே, கழக முன்னோடி நிர்வாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, விவசாயிகளே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, அத்தனைபேருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து,

இந்த நிகழ்வு ஒரு வரலாற்று நிகழ்வு. நாம் எத்தனையோ நிகழ்ச்சிகளை துவக்கி வைத்திருக்கின்றோம், அடிக்கல் நாட்டியிருக்கின்றேன், ஆனால் இந்த நிகழ்ச்சியை பொறுத்தவரைக்கும் நான் ஒரு விவசாயி என்ற அடிப்படையிலே, விவசாய குடும்பங்களுக்கும், குடிநீருக்கும் பயன்படுகின்ற அணைக்கு முன்னே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தன் உயிர் இருக்கின்றவரை, விவசாயிகளுக்காக, தமிழ்நாட்டுக்காக பாடுபட்டு, சட்டப்போராட்டம் நடத்தி, சட்டத்தின் வாயிலாக காவிரி மேலாண்மை இறுதி ஆணையை பெற்று, அதனுடைய நினைவாக இங்கே நினைவுத் தூண் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த வரலாற்று சிறப்புமிக்க இந்த நிகழ்ச்சி, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, இந்த நினைவுத் தூண் எழுப்பப்பட்டு, இன்றைக்கு நிறைவு பெற்று, அதனை திறக்கின்ற ஒரு நல்ல பாக்கியத்தை, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அளித்ததற்கும், இறைவன் அளித்ததற்கும், இந்த நேரத்திலே நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எத்தனையோ தலைவர்கள் பிறக்கின்றார்கள், நாட்டை ஆளுகின்றார்கள், மறைகின்றார்கள். ஆனால், நாட்டுக்காக பிறந்து, மக்களுக்காக வளர்ந்து, வாழ்ந்து, மக்களுக்காகவே சேவை செய்து மறைந்த தலைவர் புரட்சித்தலைவி அம்மா என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

காவிரி நடுவர்மன்ற ஆணையை அரசிதழில் வெளியிடுவதற்கு உத்தரவிட்ட பிறகு, அது நடைமுறைபடுத்தப்பட்ட பிறகு, அம்மாவுக்கு நன்றி தெரிவிக்க தஞ்சையிலே விவசாயப் பெருங்குடி மக்கள் விழா எடுத்தார்கள். அந்த விழாவிலே இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அற்புதமான கருத்தை அப்பொழுது பதிய வைத்தார்கள். "என்னைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட முறையில் என் வாழ்க்கையில் கிடைத்த மகத்தான, பிரம்மாண்டமான வெற்றி இதுவே என்று கூறலாம். என்னுடைய 30 ஆண்டுகால அரசியல் பொதுவாழ்வில் இன்று தான் சாதனை புரிந்ததாக நான் மனநிறைவடைகின்றேன். நான் எவ்வளவோ சாதனைகள் செய்ததாக எத்தனையோ பேர் பாராட்டினாலும், அவற்றையெல்லாம் நான் சாதனையாகக் கருதவில்லை, இதைத்தான் மகத்தான சாதனையாகக் கருதி, நான் மனநிறைவு பெறுகின்றேன். எனக்கும், எனது தலைமையிலான அரசுக்கும், காவிரி டெல்டா விவசாயிகளுக்கும் கிடைத்த மகத்தான வெற்றி இது" என்று அந்த நிகழ்ச்சியின் வாயிலாக அற்புதமான, ஆழமான கருத்தை நமக்கு தெரிவித்து, இன்றையதினம் மறைந்திருக்கின்றார்கள். அவர்கள் சொன்ன கருத்தை வைத்து, எந்தளவிற்கு பாடுபட்டு இந்தத் தீர்ப்பை பெற்றிருக்கின்றார்கள் என்று இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்க முடிகின்றது.

அதேபோல, இந்த மேட்டூர் அணை 1925–ஆம் ஆண்டு கட்டுவதற்கு தொடங்கப்பட்டு, 1934–ஆம் ஆண்டு கர்னல் எல்லீஸ் வடிவமைத்தபடி ரூபாய் 4.80 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டது. இந்த அணை கட்டி முடிக்கப்பட்டு கிட்டத்தட்ட 83 ஆண்டுகளாகின்றது. இந்த அணை கட்டும்போது, 90 சதவீதம் பேர் நாம் பிறந்திருக்கவே மாட்டோம். அந்த காலகட்டத்திலேயே, இந்த அணையை கட்டி, 12 மாவட்டங்களைச் சார்ந்த காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் இதனால் பாசன வசதி பெறுகின்றார்கள். 16 மாவட்ட மக்கள், குடிநீர் ஆதாரமாக இந்த தண்ணீரை பயன்படுத்தி வருகின்றார்கள். இப்படி ஒரு அற்புதமான திட்டத்தை அந்தக் காலத்திலே கட்டி நமக்கு வழங்கியிருக்கின்ற அந்த பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியை சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டினுடைய ஜீவநதியான இந்த காவிரி நதி நீரை மேட்டூர் அணையின் மூலமாக தேக்கி, கிடைக்கக்கூடிய தண்ணீரின் மூலமாக 16.5 இலட்சம் ஏக்கர் நிலம் பாசனவசதி பெறுகிறது. 16 மாவட்ட

மக்கள், குடிநீர் ஆதாரமாக இந்த நீரை பயன்படுத்தி வருகின்றார்கள். அப்படிப்பட்ட சிறப்புடைய அணை மேட்டூர் அணை. அது நம்முடைய சேலம் மாவட்டத்தில் அமைந்தது நம் அனைவருக்கும் பெருமையாக இருக்கின்றது. மேட்டூர் அணையின் முகப்பு வாயிலை அமைக்க, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே ஆணையிடப்பட்டு, இதற்கு நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு இன்றைக்கு நிறைவடைந்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இந்த அணையில் கிட்டத்தட்ட 83 ஆண்டுகாலமாக சேர்ந்துள்ள வண்டல் மண்ணை நாம் அகற்றவேண்டும். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு, மேலும் நீரை சேமித்து வைக்க, அதிக கொள்ளவுள்ள நீரை நிரம்பச் செய்ய, இந்த மேட்டூர் அணையில் வண்டல் மண் அள்ளக்கூடிய ஒரு சூழலை உருவாக்கினோம். அதன் மூலமாக இதுவரை 12.01.2018 வரை, 2,09,387 கனமீட்டர் வண்டல் மண்ணை, விவசாய பெருங்குடி மக்கள் இலவசமாக இன்றைக்கு எடுத்துச் சென்று அவருடைய நிலங்களுக்கு எருவாக இட்டிருக்கின்றார்கள். இது ஒரு அற்புதமான திட்டம். இத்திட்டம், 28.5.2017 அன்று விவசாயிகளுக்கு இலவசமாக வண்டல் மண்ணை அள்ளும் திட்டத்தை நாங்கள் துவக்கி வைத்தோம். அந்த திட்டம் இன்றைக்கு வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இதுமட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் குடிமராமத்து என்னும் அற்புதமான திட்டத்தை அம்மாவினுடைய அரசு அறிவித்து, முதற்கட்டமாக, 1519 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு அந்தப் பணிகள் 90 சதவீதம் இன்றைக்கு நிறைவு பெற்றிருக்கின்றது. மேலும், இரண்டாவது கட்டமாக, விவசாயிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, மேலும் 2065 ஏரிகளை தூர்வாருவதற்காக அம்மாவினுடைய அரசால் ரூபாய் 331 கோடியை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தப் பணியும் விரைவாக துவங்கப்பட உள்ளது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். விவசாயிகளுக்கு உயிராக இருக்கின்ற நீரினை எந்தெந்த வகையிலே அரசு சேமிக்க முடியுமோ, அத்தனை வழிகளிலும் சேமித்து, விவசாயத்திற்கும், குடிப்பதற்காகவும், அம்மாவினுடைய அரசு திட்டமிட்டு செயல்பட்டு கொண்டிருக்கின்றது.

இன்றைக்கு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், விவசாய பெருங்குடி மக்கள் எல்லாம், பொழிகின்ற மழைநீரில் ஒரு சொட்டுகூட வீணாகாமல் அதை தேக்கி வைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அம்மாவினுடைய அரசு, மூன்று ஆண்டுகள் திட்டமாக தடுப்பணை கட்டுவதற்காக ரூபாய் 1000 கோடி ஒதுக்கியிருக்கின்றது. முதற்கட்டமாக, இந்த ஆண்டு ரூபாய் 350 கோடி தடுப்பணை கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. எஞ்சிய தொகை ரூபாய் 650 கோடிக்கான பணி அடுத்த இரண்டாண்டுகளில் தொடங்கப்படும். பொழிகின்ற மழைநீர் முழுவதும் ஓடைகளிலும், நதிகளிலும் தடுப்பணை கட்டப்பட்டு, திறக்கப்பட்டு, நிலத்தடி நீர் உயர்ந்து விவசாயிகளுக்கும், குடிப்பதற்கும் தேவையான நீர் கிடைக்கும். இவையெல்லாம் ஒரு வரலாற்று சாதனை. ஆகவே, நீரை எந்தவிதத்திலும் வீணாகாமல் தேக்குவது அரசினுடைய நோக்கம் என்பதை திட்டவட்டமாக இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த அரசு விவசாயிகளுக்கும், விவசாய பெருங்குடி மக்களுக்கும் என்றென்றும் உறுதுணையாக விளங்கும் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்டி, இந்த அரசு பல்வேறு சாதனைகளை புரிந்து கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த நிகழ்ச்சியின் வாயிலாக பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியிருக்கின்றோம். இந்த மேட்டூர் நகராட்சியில், அத்தனை ஏழை, எளிய மக்கள் எந்தவித இடையூறும் இல்லாமல் சொந்தமாக வீடு கட்டுவதற்காக, அம்மாவினுடைய அரசால் ஒவ்வொரு வீட்டிற்கும் எந்தவித நிபந்தனையும் இல்லாமல், ரூபாய் 2 இலட்சத்து 10 ஆயிரம் இலவசமாக வழங்கப்படும். கிட்டத்தட்ட 1970 பேர் மனு கொடுத்திருக்கின்றார்கள், தகுதியான 308 பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றார்கள். மேலும் 1664 பேர் கட்டுவதற்கு அரசால் அனுமதி வழங்கவுள்ளது. இதற்காக, அரசிற்கு முறைப்படி விண்ணப்பம் செய்தால் அவர்களுக்கு ஒவ்வொரு வீட்டிற்கும் ரூபாய் 2 இலட்சத்து 10 ஆயிரம் இலவசமாக வழங்கப்படும் என்ற நற்செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், அம்மாவினுடைய அரசு பொறுப்பேற்றபிறகு தான் இன்றைக்கு அருமையான சாலைகள் கொடுத்திருக்கின்றது. இந்த பிரதான சாலை அம்மா ஆட்சிக்கு வந்ததற்கு முன்பு எப்படியிருந்தது, அம்மா

ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னும் எப்படி சிறப்புற்றிக்கின்றது ? மேலும், 16 கண் பாலத்திற்கு மாற்றாக, மக்கள் பயன்படுத்துவதற்காக ஒரு புதிய பாலம் வேண்டுமென்று கட்டுவதற்கு பொதுமக்கள் மற்றும் பல்வேறு தரப்பினரால் கோரிக்கை வைக்கப்பட்டதற்கு, அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, அது கட்டிமுடிக்கப்பட்டு திறக்கப்பட்டிருக்கின்றது.

அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரையில், எதை அறிவித்தாலும், அதை அந்த காலஅளவிற்குள் கட்டி முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படுகிறது. அது தான் சாதனை. அதேபோல இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் தான் குடிநீர் பிரச்சினை பற்றி கேட்டார்கள். இந்த மேட்டூர் மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்குவதற்கு பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் இந்த பகுதி மக்களுக்கு கிடைக்கவில்லை என்ற ஒரு நிலை இருந்தது, அதை சுட்டிக்காட்டியவுடன் அம்மா அவர்கள் அதற்கும் நிதி ஒதுக்கீடு செய்து, அந்த பணி மேற்கொள்ளப்பட்டு, இன்றைக்கு மேட்டூர் நகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீரும் அம்மாவினுடைய ஆட்சியில் தான் வந்தது.

அதேபோல, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான், மேட்டூர் நகர மக்களுக்கு பாதாள சாக்கடை திட்டத்தையும் நிறைவேற்றி தந்திருக்கின்றார்கள். அம்மா ஆட்சியில் தான் மேட்டூர் நகர மக்களுக்கு இத்தனை நன்மைகளும் கிடைத்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இதயதெய்வம் புரட்சித்தலைவி ஆட்சி மக்களாட்சி, மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் அரசு, மக்களுக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த நிகழ்ச்சியை ஏற்படுத்தி தந்த மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், பொதுமக்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**